JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

(**Complainant- K.Sureshkumar, S/o.Krishnamurthy and Accused Natarajamoorthi, S/o.Muthusamygounder are present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 17.03.2023

**STC.No.138/2018** **Name: K.Sureshkumar S/o. Krishnamurthy PW**1

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.இ. படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் அசிஸ்டெண்ட் புரொபசராக கொங்கு இன்ஜினியரிங் கல்லூரியில் கடந்த ஒரு வருடமாக பணியாற்றி வருகிறேன். 2017 ம் ஆண்டு வருடம் நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் வியாபாரம் செய்து வந்தேன். என்ன வியாபாரம் என்றால் லாரி மற்றும் ஆடு, மாடு வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தேன். 2017 ம் ஆண்டு கரூரில் உள்ள குமாரசாமி இன்ஜினியரிங் கல்லூரியில் நான் பணிபுரிந்தேன் என்றால் சரியல்ல. குமாரசாமி இன்ஜினியரிங் கல்லூரி நிர்வாகத்தினரை அழைத்து சாட்சியாக விசாரிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

2)2017 ம் வருடத்திற்கான வருமான வரி கணக்கு நான் தாக்கல் செய்யவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்யும் தொழில் எதுவும் செய்கிறனோ என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் இந்த வழக்கு பணம் பரிமாற்றம் இருந்ததாக நான் சொல்லும் தேதிக்கு முன்னதாக கொடுக்கல் வாங்கல் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் you had financial transaction with my client என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் சம்பந்தப்பட்ட கொடுக்கல்

வாங்கலுக்கு முன்னதாக வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை எனவும், அவ்வாறு இருப்பதாக வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரிதான்.

3)நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்ததாக நான் கூறியுள்ளேனா என்றால் நான் கூறவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பணத்திற்கு வட்டி பற்றிய விபரம் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் என்னுடைய வங்கி கணக்கு விபரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் எந்த வகையில் (mode of transaction) பணம் கொடுக்கப்பட்டதாக நான் கூறவில்லை என்றால் சரிதான்.

4)எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு அந்த சமயத்தில் என்னிடம் வசதி இருந்தது என்பதை காண்பிக்க வேறு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என்ன ஆதாரம் உள்ளது என்றால லாரியின் ஆர்.சி.புக் உள்ளது. லாரியின் ஆர்.சி.புக்கை வைத்து எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனக்கு வசதி இருந்தது என்பதை காண்பிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. ஒரு கடன் கொடுத்தால் பொதுவாக அதற்கு ஆதரவாக என்ன ஆவணம் வாங்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5)07.10.2017ம் தேதியன்று எதிரி என்னிடம் பணம் கடனாக பெற்றுகொண்டார் என்பதை காண்பிக்க இவ்வழக்கு காசோலையை தவிர வேறு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை சம்பந்தப்பட்ட வங்கி கணக்கானது என்ன வகையான வங்கி கணக்கு என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் காசோலை சம்பந்தப்பட்ட வங்கி கணக்கு செயல்பாட்டில் இருந்ததா

இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது.

6)காசோலையில் உள்ள வங்கி கணக்கு யாருடைய பெயரில் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஏற்கனவே அந்த வங்கி கணக்கு முடிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. காசோலை திருப்பப்பட்டதற்கு பின்னிட்டு என்ன காரணத்தினால் வங்கி கணக்கு முடிக்கப்பட்டது என்பதை அந்த வங்கியை அணுகி நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயமானது பணம் மதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட சமயம் என்றால் சரியல்ல.

7)நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் வேறு யாராவது இருந்தார்களா என்றால் என்னுடைய அம்மா இருந்தார். என்னுடைய அம்மா தற்போது உயிருடன் இல்லை. இறந்துவிட்டார். நான் கூறுவது தவறு என்றும், வழக்கிற்காக எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோது என்னுடைய அம்மா உடன் இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது எழுதிய வங்கி சலானை நான் நீதின்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன கிழமை நான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் அது தற்போது நினைவில்லை.

8)கடன் கொடுத்த சமயத்தில் ஈங்கூர் கூட்டுறவு வங்கியில் நான் கடன் பெற்று அது செலுத்தவேண்டிய கடன் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அந்த கடன் நிலுவையை உரிய காலத்தில் நான் செலுத்தாததால் பின்னிட்டு அபராத வட்டியுடன் நான் செலுத்தினேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னர் மறு அறிவிப்பு எதிரிக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எதிரி பதிலறிவிப்பில் கேட்ட விபரங்களை நான் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரி என்ன வேலை பார்த்துகொண்டிருந்தார் என்றால் ஈங்கூரில் இன்ஜினியரிங் கல்லூரி நடத்தி வந்தார். எதிரி நடத்தி வந்த கல்லூரி நிர்வாகம் வங்கியிடம் பெற்ற

கடனை திருப்பி செலுத்தாததால் கல்லூரி நிர்வாகம் வங்கியால் முடக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9)நான் ஈங்கூரில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கும், எதிரிக்கும் வேறு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தவிர இன்னும் வேறு நான்கு காசோலை வழக்குகள் எதிரி மீது இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. சின்னப்பன் மகன் சாந்தகுமார் என்பவர் எனக்கு வேண்டிய நபர் என்றால் சரியல்ல. இந்த சாந்தகுமார் காலையில் இருந்து மதியம் வரை நீதிமன்றத்தில் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரியல்ல.

10)சாந்தகுமார் கேட்டுகொண்டதற்கிணங்க அவருக்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாந்தகுமாரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் இல்லை. உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் அவரை சாட்சியாக விசாரிக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 07.10.2017 ம் தேதி எதிரி என்னிடம் ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் பெற்றுகொண்டு வழக்கு காசோலையை கொடுத்ததாகவும், அதற்கு உண்டான வட்டியை அப்போது செலுத்திவிட்டதாகவும், அதை 05.12.2017 ம் தேதியில் நான் கணக்கு வைத்துள்ள யூனியன் வங்கி, பெருந்துறை கிளையில் வசூலுக்கு செலுத்தியதகாவும், மேற்படி காசோலை வசூலாகாமல் கணக்கு முடிக்கப்பட்டது என்ற விபரத்துடன் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் கூறுவது உண்மை அல்ல என்றால் சரியல்ல.

11)நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி உரிய பதிலறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தால் திருப்பப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அக்கவுண்ட் closed என திருப்பப்பட்டது. நான் சாந்தகுமார் கேட்டுகொண்டதன்பேரில் அவருக்காக எதிரிக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கு இவ்வழக்கு காசோலை தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரியின் வங்கி கணக்கு முடக்கப்பட்டுள்ளது என்பது தெரிந்து இந்த வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி குற்றவாளி என்று சொன்னால் சரியல்ல. அக்கவுண்ட் close ஆன விபரம் எனக்கு தெரியாது.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.